ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2245/31 - 2021 සැප්තැම්බර් මස 17 වැනි සිකුරාදා - 2021.09.17

*2245/31 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 24/51* (VII)

**மோட்டார் வாகனச் சட்டம் (203 ஆம் அத்தியாயம்)**

மோட்டார் வாகனச் சட்டத்தின் (203 ஆம் அத்தியாயமான) 213ஆ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
2021, செத்தெம்பர் 10.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மோட்டார் வாகன (வீதிக்காப்பு நிதிய) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2021, ஒற்றோபர் 01 ஆந் திகதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2. மோட்டார் வாகனச் சட்டத்தின் (203 ஆம் அத்தியாயமான) பாகம் VI இன் கீழ், மூன்றாந்திறத்தவர் ஆபத்துக்கள் தொடர்பில், விடயத்திற்கேற்ப, ஒரு காப்புறுதிப்பத்திரத்தை அல்லது பிணைப்பொறுப்பை வழங்குகின்ற ஒவ்வொரு காப்புறுதியாளரும் அல்லது ஆளும், கட்டுப்பணத்தின் இரண்டு சதவீதத்தை (2%) நிதியத்துக்கு உதவுதொகையாகச் செலுத்துதல் வேண்டும்.

3. இரண்டாயிரத்து நான்காமாண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதிய 1368/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2004 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, வீதிக்காப்பு நிதிய ஒழுங்குவிதிகள், அவற்றின்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் ஒழிக்கப்படுகின்றது.

4. இவ்வொழுங்கு விதிகளின் நோக்கத்துக்காக-

"நிதியம்" என்பது, (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 213ஆ என்னும் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட வீதிக்காப்பு நிதியம் என்று பொருளாகும்.